## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

## O.S. No. 118 / 2023

**வா.சா.1 – சரோஜா** 09.07.2025

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

ஆஜர் 4ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். 4ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த தம்பி நல்லதம்பியின் மகள் ஆவார். 3ம் பிரதிவாதி சுமதி எனது தம்பி நல்லதம்பியின் மனைவி ஆவார். 2ம் பிரதிவாதி நல்லதம்பி எனது உடன்பிறந்த தம்பி ஆவார். நான் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகி சுமார் 50 வருடங்கள் ஆகிவிட்டது. நான் திருமணம் ஆனது முதல் எனது கணவருடன் 50 வருடமாக மிளகனூரில் வசித்து வருகிறேன். 2வது வாதி சந்திராவிற்கு திருமணமாகி சுமார் 45 வருடங்கள் ஆகிவிட்டது. 2ம் வாதி சந்திரா 45 வருடங்களாக அவரது கணவருடன் மானாமதுரை பைபாஸ் ரோட்டில் வசித்து வருகிறார். 3ம் வாதி ஜெயலலிதாவிற்கு திருமணமாகி சுமார் 35 வருடங்களாகிவிட்டது. 3ம் வாதியின் கணவர் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். 3ம் வாதி இராஜகம்பீரத்தில் வசித்து வருகிறார். இந்த வழக்கிற்கு விபரம் 1ம் பிரதிவாதி சந்தானம் தான் கூறினார். எனது உடன் பிறந்த சகோதரி யசோதை என்பவர் இறந்துவிட்டார். எனது உடன்பிறந்த அண்ணன் கிருஸ்ணன். யசோதை திருமணம் ஆகாமலே இறந்துவிட்டார்.எனது அண்ணன் கிருஸ்ணனுக்கு திருமணம் ஆனது. திருமணம் ஆன பின்பு கிருஸ்ணன் அவரது மனைவியுடன் வசித்து வந்தார். தற்போது எனது அண்ணன் கிருஸ்ணன் உயிருடன் இல்லை. எனது அண்ணன் கிருஸ்ணனையும் எனது தங்கை யசோதையையும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**